# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 353 | 4 Pages | 15.7.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 353 | 4 பக்கங்கள் | 15.7.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# 3,995 அரசு உதவிபெறும் தொடக்க பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்



சென்னை, ஜூலை 15

தமிழ்நாடு முழுவதிலும் அரசு உதவி பெறும் தொடக்க பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் ஒன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' கடந்த 15.9.2022 அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கு மக்களிடையே ஏற்பட்ட வரவேற்பினையும், மாணவ, மாணவிகள் இடையே ஏற்பட்ட எழுச்சியையும் கருத்தில் கொண்டு 25.8.2023 அன்று கலைஞர் பிறந்த ஊராகிய திருக்குவளையில் முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டு, 30,992 அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 18 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் காலை உணவை சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளி பாடங்களில் கவனம் செலுத்தி படித்து வருகிறார்கள். இந்நிலையில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தும் வகையில், முதல்வர் முக.ஸ்டாலின் நாளை (15ம் தேதி) காமராஜர் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி புனித அன்னாள் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைக்கிறார். இதன் மூலம் மொத்தமுள்ள 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 லட்சத்து 23 ஆயிரத்து 536 குழந்தைகள் பயனடைவார்கள். விழாவில், அமைச்சர்கள், எம்பி, எம்எல்ஏக்கள், கலந்து கொள்கின்றனர்.

# பழனி முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு 1,003 ஆய்வு கட்டுரைகள் வரப்பெற்றுள்ளன: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



சென்னை, ஜூலை 15

பழனி, முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு 1,003 ஆய்வுக் கட்டுரைகள் வரப்பெற்றுள்ளன என்று இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார். பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று அமைச்சர் சேகர் பாபு தலைமையல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநாட்டை சிறப்பாக நடத்துவதும் குறித்தும், முன்னேற்பாடுகள் குறித்தும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் சேகர் பாபு பேசுகையில்: முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, மொரீசியஸ், ஹாங்காங், லண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து 1,003 ஆய்வுக் கட்டுரைகள் வரப்பெற்றுள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரைகளை இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு பரிசீலித்து, தகுதி வாய்ந்த கட்டுரைகளை தேர்வு செய்து ஆய்வு மலர்களில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

மாநாட்டின் அனைத்து அரங்குகளும் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளோடு, கண்காட்சி அரங்கானது முருக பக்தர்கள் வியந்து போற்றும் வகையிலும் சிறப்பாக வடிவமைத்திட வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினோர். இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் சந்தரமோகன்,

இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முரளீதரன், மாநாட்டின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் திருக்கயிலாய பரம்பரை, பேரூர் ஆதினம், சிரவை ஆதினம் குமரகுருபரசுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம், சத்தியவேல் முருகனார், சுகிசிவம், தேசமங்கையர்க்கரசி, கூடுதல்

ஆணையர்கள் சங்கர், திருமகள், ஹரிப்ரியா, தலைமைப் பொறியாளர் பெரியசாமி, இணை ஆணையர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அரிமளம் அருகே 38 ஜோடி மாட்டு வண்டிகள் எல்கை பந்தயம்





திருமயம், ஜூலை 15

அரிமளம் அருகே நடைபெற்ற பிரம்மாண்டமான பந்தயத்தில் 38 ஜோடி மாட்டு வண்டிகள், 9 குதிரை வண்டிகள் கலந்து கொண்டன. புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அருகே உள்ள புதுநிலைப்பட்டி கண்ணுடைய அயயனார், குறுந்துடைய அய்யனார் கோயில் புரவி எடுப்பு திருவிழாவை முன்னிட்டு 10ம் ஆண்டு மாட்டுவண்டி, குதிரை வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. பந்தயத்தில் புதுக்கோட்டை திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், தேனி, விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 38 ஜோடி மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன. பந்தயமானது பெரிய மாடு, நடு மாடு, சிறிய மாடு என மூன்று பிரிவாக நடத்தப்பட்டது.

பெரிய மாடு பிரிவில் பந்தய தூரம் 8 மைல் தூரமாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 7 ஜோடி மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன. இதில் முதல் பரிசு மாங்குளம் தேவேந்திரன், 2ம் பரிசு கே.புதுப்பட்டி கே ஏ அம்பாள், 3ம் பரிசு கே.புதுப்பட்டி கலை, 4ம் பரிசு பரளி சித்தார்த் ஆகியோருக்கு சொந்தமான மாட்டு வண்டிகள் வென்றன. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நடுமாடு பிரிவில் பந்தயத்தூரமானது 6 மைல் தூரமாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 10 ஜோடி மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன.

இதில் முதல் பரிசை விராமதி கருப்பையா, 2ம் பரிசு பரளி செல்வி, 3ம் பரிசு கொடிமங்கலம் திருப்பதி, 4ம் பரிசு புதுநிலைபட்டி சீமான் கண்ணன் ஆகியோருக்கு சொந்தமான மாடுகள் வென்றன. இறுதியாக நடந்த சிறிய மாடு பிரிவில் பந்தய தூரம் 5 மைல் தூரமாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 21 ஜோடி மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன. இதில் முதல் பரிசை புதுநிலைப்பட்டி சீமான் கண்ணன், 2ம் பரிசு உறுதிகோட்டை கதிரேசன், 3ம் பரிசு கே.புதுப்பட்டி அம்பாள், 4ம் பரிசு அரிமளம் சேர்த்து மேல் செல்லைய்யனார் ஆகியோருக்கு சொந்தமான மாட்டு வண்டிகள் வென்றன.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நடுக்குதிரை வண்டிகளுக்கான பந்தயத்தில் 9 குதிரைகள் கலந்து கொண்டன. இதன் பந்தய தூரம் போய் வர 9 மைல் தூரமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இதில் முதல் பரிசை புதுநிலைப்பட்டி சீமான் கண்ணன், 2ம் பரிசு திருநாகேஸ்வரம் சுபிக்ஷா, 3ம் பரிசு குளித்தலை சங்கர் பாய்ஸ், 4ம் பரிசு அறந்தாங்கி முத்தமிழ் ஆகியோருக்கு சொந்தமான குதிரைகள் வென்றன.

இறுதியாக பந்தயத்தில் வெற்றி பெற்ற மாடு, குதிரை வண்டி உரிமையாளருக்கு ரொக்க பரிசு வழங்கப்பட்டது. பந்தயம் நடைபெற்ற புதுநிலைப்பட்டி கல்லூர் சாலை இருபுறமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்து பந்தயத்தை கண்டு ரசித்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை புதுநிலைப்பட்டி ஊரார்கள் மற்றும் இளைஞர்கள் செய்திருந்தனர். கே.புதுப்பட்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# இலவச கண் சிகிச்சை முகாம்




விழுப்புரம், ஜூலை 15

வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியில், விழுப்புரம் சங்கமம் லயன்ஸ் சங்கம், புதுவை.அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தினர். சிறப்பு மருத்துவர்கள் & செவிலியர்களுடன்..விழுப்புரம் சங்கமம் லயன்ஸ் சங்க தலைவர். K.குமரவேல், செயலர். N.கிஷோர். பொருளர் S.சதீஷ். அட்மின்கள் V.திலிப். G.செந்தில்குமார். உடன் முட்டத்தூர். ஓய்க்காப் மேனிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியரும். ஜே.ஆர்.சி.மாவட்டக்கன்வீனர். முனைவர். ம.பாபு செல்வதுரை. ஆகியோர் தன்னார்வப் பணியாற்றினர். சுமார் 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்றனர்.

# அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதால் அதிர்ச்சி




வாஷிங்டன், ஜூலை 15

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் 5ம் தேதி நடைபெற உள்ளது. இதில், முக்கிய கட்சிகளாக ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சி நேருக்கு நேர் மோத உள்ளன. ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய அதிபர் ஜோ பைடன் களமிறங்கியுள்ளார். அதே போல், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் களமிறங்கியுள்ளார். தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இரு வேட்பாளர்களும் தீவிர பிரசாரம் மற்றும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பென்சில்வேனியா மாகாணம் பட்லர் நகரில் நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் குடியரசு கட்சி அதிபர் வேட்பாளர் டொனால்டு டிரம்ப் பங்கேற்று பிரசாரத்தில் ஈடுபட்டார். பொதுக்கூட்டத்தில் டொனால்டு டிரம்ப் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென கூட்டத்தில் இருந்த நபர் டிரம்ப்பை குறிவைத்து துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினார். இந்த துப்பாக்கி சூடு தாக்குதலில் டொனால்டு டிரம்ப் காதில் ரத்த காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தால் கூடியிருந்த மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக பாதுகாப்பு பணியில் இருருந்த அதிகாரிகள் டிரம்ப்பை சுற்றி பாதுகாப்பு அரணாக மாறினர். இந்த துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து, துப்பாக்கி சூடு நடத்திய நபர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. துப்பாக்கி சூட்டில் காயமடைந்த டொனால்டு டிரம்ப் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவர் தற்போது நலமுடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் வேட்பாளர் டொனால்டு டிரம்ப் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இஸ்ரேல் தாக்குதலில் 71 பாலஸ்தீனர்கள் பலி



கான்யூனிஸ், ஜூலை 15

காஸா மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் 71 பாலஸ்தீனர்கள் பலியானதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் படையினர் திடீர் தாக்குதல் நடத்தியதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 250 க்கும் மேற்பட்டவர்களை பணய கைதிகளாக பிடித்து சென்றனர்.

ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரையும் பணய கைதிகளை மீட்கும் வரை காஸா மீதான தாக்குதலை நிறுத்த போவது இல்லை என இஸ்ரேல் அறிவித்துள்ளது. காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் 38,000 பேர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் காஸாவின் தென் பகுதியில் கான்யூனிஸில் நேற்று இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில், 71 பேர் பலியாயினர். 289 பேர் படுகாயமடைந்தனர்.

# புளூ டிக் குறியீட்டில் வெளிப்படைத்தன்மை இல்லை: டிவிட்டர் மீது ஐரோப்பிய யூனியன் குற்றச்சாட்டு




லண்டன், ஜூலை 15

டிவிட்டரின் புளூ டிக் குறியீடுகள் டிஜிட்டல் விதிகளின் கீழ் ஏமாற்றும் விதமாகவும், வெளிப்படைத்தன்மையற்றதாகவும் உள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. உலக பணக்காரர் ஆன எலான் மஸ்க் கடந்த 2022ல் டிவிட்டரை வாங்கினார். அதன் பிறகு டிவிட்டரில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்துள்ளார்.

டிவிட்டரில் கணக்கு வைத்திருப்பவர்கள் மாதத்துக்கு 8 டாலர் கட்டணம் செலுத்தினால் அடையாளத்தை சரிபார்த்து சான்றளிக்கும் புளூ டிக் வசதி பயனர்களுக்கு அளிக்கப்படும் என அறிவித்தார். இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் டிஜிட்டல் சேவை சட்டத்தின் கீழ் டிவிட்டரின் புளூ டிக் குறியீடுகள் குறித்து ஆணையம் விசாரணை நடத்தியது. இந்த விசாரணை அறிக்கையில் டிவிட்டரின் புளூ டிக் குறியீடுகள் ஏமாற்றும் விதமாகவும், வெளிப்படைத்தன்மையற்றதாகவும் உள்ளது என கூறி உள்ளது.

## குட்டையில் மூழ்கி சகோதரர்கள் சாவு பிறந்தநாளில் சோகம்



வேலூர், ஜூலை 15

வேலூர்மாவட்டம்காட்பாடி தாலுகா திருவலம் அடுத்த பெரிய ராமநாதபுரம் கிராமம் ஓம்சக்தி கோயில் தெருவை சேர்ந்தவர் வெங்கடேசன், விவசாயி. இவரது மனைவி செம்பருத்தி. இவர்களது மகன்கள் ராஜா(10), சாந்த்(8).அதேகிராமத்தில் உள்ள அரசுப்பள்ளியில் ராஜா 5ம் வகுப்பும், சாந்த் 3ம் வகுப்பும் படித்து வந்தனர். நேற்று பள்ளி விடுமுறை என்பதால் அண்ணன் தம்பியான ராஜா, சாந்த் உள்ளிட்ட அதே பகுதியை சேர்ந்த 6 சிறுவர்கள் அங்குள்ள ஏரிக்குட்டையில் குளித்தனர். அப்போது தண்ணீரில் மூழ்கி ராஜா, சாந்த் இருவரும் இறந்தனர்.

இதுகுறித்து வெங்கடேசன் கொடுத்த புகாரின்பேரில் திருவலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். நீரில் மூழ்கி இறந்த சாந்த்துக்கு நேற்று பிறந்தநாள். இதனால் அவரது தந்தை வெங்கடேசன், திருவலத்திற்கு சென்று கேக் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தபோது மகன்களின் இறப்பு செய்தி கேட்டு கதறி அழுதார்.

## பட்டாசு ஆலை விபத்தில் பலி எண்ணிக்கை உயர்வு



சிவகாசி, ஜூலை 15

சிவகாசி அருகே, பட்டாசு ஆலை விபத்தில் படுகாயம் அடைந்த 2 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். இதனால், பலி எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது. விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள காளையார் குறிச்சியில் தங்கையா என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை உள்ளது. நாக்பூர் உரிமம் பெற்ற இந்த ஆலையில் 60க்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன. சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இங்கு கடந்த 9ம் தேதி பட்டாசு தயாரிப்பதற்காக ஒரு அறையில் மணி மருந்து கலந்து கொண்டிருந்தனர். அப்போதுதிடீரெனவெடி விபத்து ஏற்பட்டது.

இதில், அறை முழுவதும் தீ பரவியது. இதில், அறையில் வேலை பார்த்த மாரியப்பான் (45), முத்துவேல் (45) ஆகியோர் உடல் கருகி உயிரிழந்தனர். சரோஜா (55), சங்கரவேல் (54) ஆகியோர் படுகாயத்துடன்சிவகாசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் இருவரும் மேல்சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது குறித்து எம். புதுப்பட்டி போலீசார் விசாரித்து வந்தனர். இந்நிலையில், விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சரோஜா நேற்று மாலை இறந்தார். சங்கரவேல் இன்று காலை இறந்தார். இதன் மூலம் பலி எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது.

## குற்றாலம் அருவிகளில் குளிக்க அனுமதி



தென்காசி, ஜூலை 15

குற்றாலத்தில் கடந்த 2 தினங்களுக்குப் பிறகு நேற்று மதியம் முதல் சாரல் பெய்தது. இரவு வரை தொடர்ந்து பெய்த சாரல் காரணமாக அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயின் அருவியில்பாதுகாப்புவளைவை தாண்டி தண்ணீர் விழுந்தது. ஐந்தருவியில் சில பிரிவுகள் ஒன்றாக இணைந்து தண்ணீர் விழுந்தது. பழைய குற்றால அருவியிலும் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் இரவு முதல் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி ஆகிய பிரதான அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர்.

இந்நிலையில் இன்று காலை வெள்ளப்பெருக்கு கட்டுக்குள் வந்ததை அனைத்து அருவிகளிலும் தண்ணீர் நன்றாக கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி என அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குஷியாக குளித்து மகிழ்கின்றனர்.

விடுமுறை தினம் என்பதால் சுற்றுலா பயணிகள் வருகைஅதிகரித்துகாணப்படுகிறது.

## பலதரப்பட்ட நம்பிக்கைகளும், கலாச்சாரமும்தான் நாட்டின் அழகு முஸ்லிம் போலீசார் தாடி வளர்க்கலாம்: ஐகோர்ட் கிளை கருத்து



மதுரை, ஜூலை 15

பல்வேறு மதங்கள், கலாச்சாரம் உடைய இந்தியாவில், போலீஸ்காரர்களாக பணியில் இருக்கும் முஸ்லிம்கள் தாடி வைத்துக்கொள்ளலாம் என ஐகோர்ட் மதுரை கிளை கருத்து தெரிவித்துள்ளது. மதுரையைச் சேர்ந்தவர் அப்துல்காதர்இப்ராஹிம். போலீஸ்காரரான இவர், தாடி வைத்திருந்ததால் தனது ஊதிய உயர்வை நிறுத்தி வைத்த மதுரை காவல் ஆணையரின் உத்தரவை ரத்து செய்யக்கோரி, ஐகோர்ட் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி விக்டோரியா கௌரி பிறப்பித்த உத்தரவு: மதுரையில் முதல் நிலை காவலராக இருக்கும் மனுதாரர், இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர் என்பதால் தாடி வைப்பதைவழக்கமாகக்கொண்டிருந்திருக்கிறார். 2018ம் ஆண்டு நவம்பர் 9 முதல் டிசம்பர் 9 வரை 31 நாட்கள் முறையான அனுமதி பெற்று மெக்கா, மெதினா சென்றுள்ளார். பின்பு இடது காலில் பாதிப்பு ஏற்பட்டதால், விடுப்பை நீட்டிக்குமாறு டிசம்பர் 10ம் தேதிஉதவிகாவல்ஆணையரிடம் கோரியுள்ளார். அவருக்கு விடுப்பு நீட்டிக்கப்படாததோடு, தாடி வைத்திருந்ததால் அது தொடர்பாக விளக்கம் அளிக்கக் கோரி, துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அனைத்து சாட்சிகளையும் முறையாக விசாரிக்காமல், 3 ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வை நிறுத்தி வைத்து, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர்மதுரைமாவட்ட காவல் ஆணையரிடம் அவர் முறையிட்ட நிலையில், அது இரண்டு ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது. பல்வேறு மதங்களையும், கலாச்சாரங்களையும் கொண்டது இந்தியா. பலதரப்பட்ட குடிமக்களின் நம்பிக்கைகளும், கலாச்சாரமும் ஒருங்கிணைந்தது தான் இந்நாட்டின் அழகும், தனித்துவமும். மனுதாரர்தரப்பில், காவல் துறையில் இருந்தாலும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பணியில் இருக்கும் போது நேர்த்தியாக தாடி வைத்துக் கொள்ள அனுமதி வழங்குவதை சுட்டிக்காட்டியுள்ளார். காவல்துறை சட்ட விதிகளிலும் இதற்கு அனுமதி உண்டு. எனவே தாடி வைத்துக்கொள்ள தடை விதிக்க முடியாது. இறைத்தூதரான நபிகள் நாயகத்தை பின்பற்றும் இஸ்லாமியர்கள், வாழ்க்கை முழுவதும் தாடி வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். வேற்றுமையில் ஒற்றுமை என்பதேஇந்தியாவின்சிறப்பு. மனுதாரர் மீண்டும் பணியில் சேர்ந்து உடல்நலக்குறைவுடன், அது தொடர்பான மருத்துவ சான்றிதழுடன் விடுப்பு கோரி உள்ளார். அவருக்கு விடுப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதை விடுத்து, தண்டனையை மாற்றியமைத்த மதுரை காவல் ஆணையரின் உத்தரவு அதிர்ச்சியூட்டும் வகையில், ஏற்றத்தாழ்வுடன் உள்ளது. ஆகவே, மனுதாரருக்கான ஊதிய உயர்வை நிறுத்தி வைத்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக, 8 வாரங்களுக்குள் மதுரை மாநகர காவல் ஆணையர் உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## இலங்கையில் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள், படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஒன்றிய அமைச்சரிடம் மீனவர்கள் மனு



ராமேஸ்வரம், ஜூலை 16

ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலுக்கு, ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறைஅமைச்சர்ராஜீவ் ரஞ்சன் சிங், சுவாமி தரிசனம் செய்ய வருகை தந்தார். இவரை ராமேஸ்வரம் விசைப்படகு சங்க மீனவர்கள் சங்க பிரதிநிதிகள் சேசுராஜ், சகாயம் உள்ளிட்ட பலர் விடுதியில் சந்தித்தனர். அப்போது அவரிடம், இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள், படகுகளை விடுவிக்கக் கோரியும், மீட்க முடியாத நிலையில் உள்ள படகுகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மீனவர்கள் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை மீனவ பிரதிநிதிகள் மனுவாக அளித்தனர்.

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெயரில் 100 ரூபாய் நினைவு நாணயம்: ஒன்றிய அரசு அரசாணை வெளியிட்டது



சென்னை, ஜூலை 15

கலைஞர் பெயரில் ரூ.100 மதிப்பில் நினைவு நாணயம் வெளியிட ஒன்றிய அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. மறைந்த தலைவர் கலைஞர் பெயரில், 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி' என்ற பெயரில் ஒரு நினைவு நாணயம் வெளியிட தமிழக அரசு விரும்பியது. இதற்காக, ரூ.100 மதிப்பில் நினைவு நாணயம் வெளியிடும்படி ஒன்றிய நிதிய மைச்சகத்திடம் தமிழக அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த நாணயத்தை கலைஞரின் நூறாவது பிறந்தநாளில் ஜூன் 3ம் தேதி வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நாணயத்திற்கான அனுமதி கோப்பில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கையொப்பம் இட்டதாகதகவல் வெளியானது.

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி' என்ற பெயரில் நினைவு நாணயம் வெளியிட ஒன்றிய அரசு அனுமதி வழங்கி உள்ளது. ஆங்கிலம் மற்றும் இந்தியில் அவரின் பெயருடன் 'தமிழ் வெல்லும்' என்ற வாசகம் இந்த நாணயத்தில் இடம் பெற உள்ளது. இந்நிலையில், 100 ரூபாய் நினைவு நாணயம் வெளியிடுவதற்கான அரசாணை ஒன்றிய அரசின் அரசிதழில் வெளியானது. நாணயத்தின் ஒரு புறம் 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் நூற்றாண்டு 1924 – 2024' என அச்சிடப்பட்டும், மறுபுறத்தில் தேசிய நினைவுச் சின்னத்துடன் ரூ.100 என நாணயத்தின் மதிப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசு மருத்துவமனைகளில் அடையாளம் தெரியாத உடல்களை தகனம் செய்யக்கோரிய வழக்கில் அரசு அறிக்கை தர வேண்டும்: ஐகோர்ட் முதன்மை அமர்வு உத்தரவு

சென்னை, ஜூலை 15

சென்னைமாம்பலத்தை சேர்ந்த ஜீவாத்மா கைங்கரிய தொண்டு நிறுவனம் தரப்பில், அதன் நிர்வாக இயக்குனர் ரமணி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், அரசு மருத்துவமனை பிணவறைகளில் வைக்கப்பட்டிருக்கும் உரிமை கோரப்படாத மற்றும் அடையாளம் தெரியாத உடல்கள் நாளுக்குநாள் அதிகளவில் தேங்கி வருகிறது. சென்னை அரசு மருத்துவமனையில் மட்டும் அடையாளம் தெரியாத, உரிமை கோரப்படாத நிலையில் 100 உடல்கள் ஒரே மாதத்தில் தேங்கியுள்ளன.

தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் இதே நிலை உள்ளது. இதனால் இறந்தவர்களின் உடல்கள் அழுகிய நிலையில் அவசர அவசரமாக புதைக்கப்படுகிறது. சில உடல் மருத்துவ பயன்பாட்டிற்காக எடுத்து செல்வதாக கூறி தவறாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதுமட்டுமல்லாமல் உடலைகளை அடக்கம் செய்வதற்கு சென்னை போன்ற மாநகர பகுதிகளில் போதிய இடம் இல்லை. தனியார் தொண்டு நிறுவனங்கள் உடலை அடக்கம் செய்ய முன்வந்தாலும்அதற்கான செலவு தொகையை அரசு வழங்குவதில்லை.

மேலும், ஒரே இடத்தில் பல உடல்களை புதைப்பது போன்ற பல்வேறு பிரச்னைகள் உள்ளன. எனவே, தமிழகம் முழுவதும் உள்ள அடையாளம் தெரியாத, உரிமை கோரப்படாத உடல்களை உரிய சட்ட விதிகளை பின்பற்றி உடல்களில் உள்ள அடையாளம், சாட்சி, இறப்பு சான்று, உடற்கூறு சான்று ஆகிவற்றை பெற்று தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான குற்ற ஆவண காப்பகத்தில் பதிவு செய்த பின்உடல்களைபுதைக்காமல் தகனம் செய்யுமாறு சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன், முகமது சபிக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அரசு தரப்பில் அரசு பிளீடர் எட்வின் பிரபாகர் ஆஜராகி இந்த வழக்கு தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும் என்று கோரினார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், விசாரணையை ஆகஸ்ட் 1ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## தென்காசியில் காதல் மனைவி தூக்கிட்டு சாவு குளுக்கோசில் விஷ ஊசி செலுத்தி சேலம் அரசு டாக்டர் தற்கொலை: 2 முறை காப்பாற்றியும் 3வது முறை உயிரை விட்டார்




சேலம், ஜூலை 15

காதல் மனைவி தற்கொலை செய்து கொண்ட விரக்தியில், சேலம் அரசு டாக்டர் விஷ ஊசி செலுத்தி தற்கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சேலம் அம்மாபேட்டை வாய்க்கால்பட்டறையை சேர்ந்தவர் இனியன் (32). இவர் தென்காசி மாவட்டம் கலிங்கப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார மையத்தில்டாக்டராகபணியாற்றி வந்தார். கடந்த 11 மாதத்திற்கு முன்பு சேலம் அம்மாபேட்டையை சேர்ந்த சவுமியா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். தம்பதி இருவரும் தென்காசியில் வசித்து வந்தனர். ஒன்றரை மாத கர்ப்பிணியான சவுமியா சேலத்தில் உள்ள தனது தாய் வீட்டுக்கு சென்று வருவதாக கணவரிடம் தெரிவித்தார். அப்போது, இனியன் தனது தாயும் சேலத்தில் தனியாக இருப்பதாகவும் இதனால் தனது தாய் வீட்டுக்கு செல்லும்படியும் சவுமியாவிடம் தெரிவித்துள்ளார். இதில் அவர்களுக்குள் கருத்து மோதல் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் மன வேதனையில் இருந்து வந்த சவுமியா கடந்த 6ம் தேதி வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இதனால் அதிர்ச்சியடைந்த இனியனும் தனக்கு ஊசி போட்டு தற்கொலைக்கு முயன்றார். ஆனால் அவரை அங்கிருந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காப்பாற்றினர்.

பின்னர் சேலம் வந்த, இனியன் கடந்த 3 நாட்களுக்கு முன்பு திடீரென மாயமானார். இதுகுறித்து அம்மாபேட்டை போலீசில் உறவினர்கள்புகார்செய்தனர். 10ம் தேதி மனைவி சவுமியாவுக்கு காரியம் செய்தனர். அன்று வீட்டிற்கு வந்த டாக்டர்இனியன், 10 தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றார். உறவினர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காப்பாற்றினர். அவருக்கு கவுன்சலிங் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அவரது அறைக்கு வழக்கம் போல் படுக்கச் சென்றார். நேற்று காலை அவர் நீண்ட நேரமாகியும் எழுந்திருக்காததால், அவரது அறைக்கு சென்று குடும்பத்தினர் பார்த்தனர். அப்போது, அவர் இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இதுபற்றி அம்மாபேட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன் பேரில் எஸ்.ஐ.ராமமூர்த்தி மற்றும் போலீசார் விரைந்து சென்று உடலை கைப்பற்றி விசாரித்தனர். அதில், குளுக்கோசில் விஷ ஊசியை செலுத்திய இனியன், அந்த குளுக்கோசை தனது உடலில் செலுத்தி தற்கொலை செய்துகொண்டிருப்பது தெரியவந்தது. காதல் மனைவி இறந்த வேதனையில் இருந்து வந்த அவர் 2 முறை தற்கொலைக்கு முயன்றும் முடியாததால் மனைவியின் காரியம் முடிந்ததும் தற்கொலை செய்திருப்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை முடிவில்தான் அவர், எப்படி தற்கொலை செய்து கொண்டார் என்ற முழுவிவரமும் தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர். இச்சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஆம்பூர் அருகே அடுத்தடுத்து விபத்து; தடுப்பு சுவரில் கார் மோதி சென்னை பெண் பலி: பஸ் மீது வேன் மோதி 9 பேர் படுகாயம்



ஆம்பூர், ஜூலை 15

ஆம்பூர் அருகே வடபுதுபட்டு தேசிய நெடுஞ்சாலையில் இன்று காலை கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பெண் பலியானார். 9 பேர் காயமடைந்தனர். சென்னை வேளச்சேரி அருகே உள்ள புத்தரகரம் பகுதியை சேர்ந்தவர் பிரகதீஸ்வரன்(35). இவர் திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் உள்ள பெருமாள் கோயிலில் அர்ச்சகராக பணி செய்து வருகிறார். இவர் சென்னையில் வசித்துவரும் தந்தை வெங்கட்ராமன், தாயார் திலகம் ஆகியோரை அழைத்துக் கொண்டு நள்ளிரவு ஏலகிரிக்கு காரில் புறப்பட்டார். காரை பிரகதீஸ்வரன் ஓட்டிச்சென்றார். திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர்அடுத்த வடபுதுபட்டு அருகே இன்று அதிகாலை 4.20 மணியளவில் வந்தபோது கட்டுப்பாட்டை இழந்த கார், சாலையின் தடுப்பு சுவரில் மோதி தலைக்குப்புற கவிழ்ந்தது. இதில் படுகாயமடைந்த திலகம்(62) அதேஇடத்தில் பரிதாபமாக இறந்தார், வெங்கட்ராமன் படுகாயமடைந்தார்.

இந்நிலையில் அவ்வழியாக சென்னையில் இருந்து ஈரோட்டிற்கு சென்ற ஆம்னிபஸ், கவிழ்ந்து கிடந்த கார் மீது மோதாமல் இருக்க சாலையோரமாக நின்றது. அப்போது சென்னையில் இருந்து பெங்களூருக்கு சென்ற ஒரு வேன், ஆம்னி பஸ்சின் மீது மோதியது. இதில் வேன் நொறுங்கியது. அதில்பயணம்செய்த சென்னை வேளச்சேரியை சேர்ந்த உன்னிகிருஷ்ணன், இவரது மனைவி ஷியாமளாதேவி(40), மகன்கள் ஆதித்(12), அனிருத்(16), உறவினர்களான அபர்ணா(28), சரண்யா (25), சந்தியா(24), வேன் டிரைவரான சென்னை புழுதிவாக்கத்தை சேர்ந்த டிரைவரான திருஞானசம்பந்தம்(41) உள்பட 9 பேர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று படுகாயமடைந்த வெங்கட்ராமன், உன்னிகிருஷ்ணன் உள்பட 10பேரை மீட்டு ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதில் வெங்கட்ராமன், திருஞானசம்பந்தம் ஆகியோர் வேலூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இதுகுறித்து வழக்கு பதிந்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# விருதுநகர் மாவட்டம் 'Coffee With Collector" என்ற 78வது கலந்துரையாடல் நிகழ்ச்சி: கலெக்டர் மாணவர்களுடன் கலந்து கொண்டார்



விருதுநகர், ஜூலை 15

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (12.07.2024) அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. இன்டர்நேஷனல் பள்ளியிலிருந்து 11 மற்றும் 12 ஆம் வகுப்பிலிருந்து சிறந்து விளங்கக்கூடிய 45 பள்ளி மாணவர்களுடனான 'Coffee With Collector" என்ற 78வது கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்முனைவர்வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடி, கல்லூரிகள் தேர்வு, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த உரிய வழிகாட்டுதல் வழங்கினார்.

விருதுநகர் மாவட்டத்தில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் கல்வி, பொது அறிவு, விளையாட்டு, ஓவியம், இசை உள்ளிட்ட பல்வேறு திறன் அடிப்படையில் மாணாக்கர்களின் திறன்களை கண்டறிந்து, மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதி வாரம் ஒருமுறை அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் அழைத்து கலந்துரையாடும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டு, இன்று 78வது முறையாக கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், மாணவர்களுடைய உயர்ந்த இலட்சியம், அவர்களுடைய உயர்கல்வி பயில்வதற்கு வழிகாட்டுதல், போட்டி தேர்வுகளை எதிர்கொள்ளுதல், தோல்வியை எவ்வாறு எதிர்கொள்வது, அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் அவர்களுடைய சந்தேகங்களை அகற்றி, அவர்கள் வாழ்க்கையில் எங்கு பிறந்தோம், நாம் அரசு பள்ளியில் பயின்றோம், நமக்கு வசதி இல்லை,

நமக்கு பின்புலம் இல்லை என்பதெல்லாம், வாழ்க்கையில் ஒரு உயர்ந்த இடத்தை அடைவதற்கு ஒரு தடை இல்லை என்பதை புரிய வைத்து, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்புடன்தொடர்ந்து உழைத்தால் நாம் எதையும் சாதிக்க முடியும் என்பதை உணர்த்தும் வகையில் சரியான வழிகாட்டுதல் வழங்குவதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மாணவர்களிடம் அவர்களுடைய இலட்சியம், அவர்களுக்கு எந்த துறையில் ஆர்வம், அவர்கள் உயர் கல்வி பயில விரும்பும் கல்லூரி மற்றும் இடம் உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்தார்.

பள்ளி கல்லூரி படிப்பு என்பது ஒருவரின் வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும். எனவே பள்ளி மற்றும் கல்லூரி படிப்பின் மூலம் வாழ்க்கைக்கான பல அனுபவங்களை கற்றுக் கொள்ளலாம். அனுபவங்களில் இருந்து கிடைக்கும் கல்விதான் சிறந்த கல்வியாகும்.

பன்னிரண்டாம் வகுப்பு பள்ளி படிப்பை முடித்தவுடன் கல்லூரி படிப்பில் சேருவதற்காக அனைத்து கல்லூரிகளிலும் தவறாமல் விண்ணப்பம் செய்ய வேண்டும். கடந்தாண்டு எந்த கல்லூரியில் எவ்வளவு கட் ஆப் மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது போன்ற தகவல்களை தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசுப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களுக்கு 7.5 சதவிகித இடஒதுக்கீட்டில் அரசு மருத்துவக்கல்லூரி, பொறியியல் கல்லூரி, விவசாயக்கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, செவிலியர் கல்லூரி, உள்ளிட்ட அரசு கல்லூரியில் உயர்கல்வி பயில்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகவும், எனவே இந்த வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

12ம் வகுப்பில் எடுக்க கூடிய மதிப்பெண்களை பயன்படுத்தி நமக்கான நல்ல வாயப்புகளை உருவாக்கி கொள்ள வேண்டும். உயர்கல்வி எங்கு பயின்றாலும், இந்தியாவில் சிறந்த கல்லூரியை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும். வெற்றிக்கு தேவையான விஷயங்களை தொடர்ந்து ஆர்வத்துடன், கவனசிதறல் இல்லாமல், தொடர்ந்து விடா முயற்சியுடனும், கடினமாக உழைத்தால் எளிதாக வெற்றி பெறலாம்.

மேலும், ஒவ்வொருவருக்கும் என்று தனித்திறமைகள் உள்ளன. அத்திறமைகளை அனைவரும் வளர்த்து கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும் என மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன், தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் மாணவ, மாணவியர்கள்; உற்சாகத்துடன் கலந்து கொண்டு, இந்த நிகழ்ச்சி மூலம் எங்களுக்கு ஒரு புத்துணர்வு, ஊக்கம்அளிப்பதாகவும், மாவட்ட ஆட்சியர் போன்று தாங்களும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகி உள்ளதாகவும், எங்களுடைய கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் தெளிவான விடை கொடுத்ததாகவும், நாங்களும் மாவட்ட ஆட்சியர் போன்று சாதித்து காட்டுவோம் என்றும், இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்த கலெக்டர் வீ.ப.ஜெயசீலன், மாணவர்கள் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

# நீலகிரியில் முதன்முறையாக மூளைச்சாவு அடைந்த பெண்ணின் உடல் உறுப்புகள் தானம்



ஊட்டி, ஜூலை 15

நீலகிரி மாவட்டத்தில் முதன்முறையாக ஊட்டியைச் சேர்ந்த பெண் உடல் உறுப்புகள் தானம் பெறப்பட்டது. ஊட்டி மேரிஸ் ஹில் பகுதியைச் சேர்ந்தவர் கில்பர்ட். இவரது தாயார் எமிலி லாரன்ஸ் (62). இவருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. கை, கால்கள் செயல்படாத நிலையில் பேச்சும் இல்லாமல் கோமா நிலைக்குச் சென்றுள்ளார். இதனைத்தொடர்ந்து அவரை ஊட்டியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு நேற்று முன்தினம் வரை அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் சிகிச்சையில் எந்த பலனும் அளிக்காத நிலையில், தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் எமிலிக்கு மூளைச்சாவு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து, எமிலியை ஊட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றுள்ளனர். அங்கும் அவரின் உடல் நிலையில் முன்னேற்றம் அடையாத நிலையில், எமிலியின் உடல்உறுப்புகளைதானம் செய்ய அவரது குடும்பத்தினர் முன்வந்தனர். இதைத் தொடர்ந்து, நேற்று இரவு எமிலியின் கல்லீரல், கண்கள் மற்றும் சிறுநீரகங்கள் தானமாக வழங்கப்பட்டது. மருத்துவர்கள் அடங்கிய குழு ஊட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். அறுவை சிகிச்சை முடிந்தபின் அவரது உடல் உறுப்புகள் கோவையில் உள்ள சில தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு கொண்டு செல்லப்பட்டது.

எமிலியின் உடல் உறுப்புகளை தானமாக வழங்கிய அவரது மகன் மற்றும் மகள்களுக்கு நீலகிரி மாவட்ட கலெக்டர் அருணா நன்றி தெரிவித்தார். உடல் உறுப்பு தானம் செய்த பெண்ணின் உடலுக்கு கலெக்டர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ஒருவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டதும், மூளைசாவு அடைந்த ஒருவரின் உடல்உறுப்புகள்அறுவை சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டதும் நீலகிரி மாவட்டத்தில் இது முதல் முறையாகும்.

# மாடுகள் குறுக்கே ஓடியதால் சாலையோர பள்ளத்தில் பாய்ந்த அரசு பேருந்து




ஸ்ரீபெரும்புதூர், ஜூலை 15

ஸ்ரீபெரும்புதூர் அருகே மாடுகள் குறுக்கே ஓடியதால், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர பள்ளத்தில் அரசு பேருந்து பாய்ந்தது. பயணிகள் அதிர்ஷ்டவசமாக தப்பினர். செங்கல்பட்டில் இருந்து திருவள்ளூர் நோக்கி 30க்கும் மேற்பட்ட பயணிகளுடன் அரசு பேருந்து நேற்று புறப்பட்டது. ஸ்ரீபெரும்புதூர்மண்ணூர் சாலையில் நெமிலி அருகே வந்தபோது, திடீரென சாலையில் குறுக்கே மாடுகள் ஓடியது. இதனால் டிரைவர், வேகத்தை குறைக்க திடீரென பிரேக் போட்டுள்ளார்.

இதில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர 10 அடி பள்ளத்தில் பேருந்து பாய்ந்தது.

பயணிகள் அலறி துடித்தனர். இந்த விபத்தில் எந்த காயமுமின்றி பயணிகள் அதிஷ்டவசமாக தப்பினர். இதையறிந்ததும் அப்பகுதி மக்கள் சம்பவ இடத்துக்கு வந்து பயணிகளை மீட்டனர். பின்னர், வேறு பேருந்தில் பயணிகளை அனுப்பி வைத்தனர். தகவலறிந்து பெரும்புதூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பொக்லைன் இயந்திரம் பேருந்தை மீட்டனர்.

இந்த சம்பவத்தால் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பரபரப்பு நிலவியது.

# உத்திரமேரூர் மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகம் கோலாகலம்



உத்திரமேரூர், ஜூலை 15

உத்திரமேரூர் பஜார் வீதியில் மிகவும் பழமை வாய்ந்த பிரசித்தி ஸ்ரீ நடுத்தெரு மாரியம்மன் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் கடந்த சில மாதங்களாக புனரமைக்கும் பணி நடந்து வந்தது. அந்த பணிகள் அனைத்தும் அண்மையில் முடிந்து கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்தது. இதை முன்னிட்டு கடந்த 2 நாட்களாக கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்ட யாக சாலையில் வாஸ்து ஹோமம், சாந்தி ஹோமம், அக்னி பிரதிஷ்டை, கும்ப ஆராதனைஹோமம்உள்ளிட்ட பல்வேறு ஹோமம் மற்றும் பூஜைகள் நடந்தன.

தொடர்ந்து நேற்று மூன்றாம் கால யாகசாலை பூஜை முடிந்தபின் மேள தாளங்கள்,

வானவேடிக்கைகளுடன் புனித நீர் கொண்டு வரப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கலசத்தின் மீது புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் தீபாராதனை காண்பிக்கப்பட்டு பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. விழாவையொட்டி கோயில் வளாகத்தில் பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை விழா குழுவினர்கள் மற்றும் கிராம மக்கள் சிறப்பாக செய்திருந்தனர். சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

# திருநெல்வேலி மாவட்டம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு மையம்: கலெக்டர் ஆய்வு



நெல்லை, ஜூலை 14

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தூய யோவான் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு ஐ நடைபெற்றதை மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு ஐ (தொகுதி ஐ) பதவிகளுக்கான முதல் நிலை தேர்வு நடைபெற்றது.

மேலும், தேர்வுமையத்திற்குள் செல்போன்கள், எலக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள் மற்றும் மின்னணு சாதனங்களை எடுத்துச்செல்லவோ, தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து தேர்வினை சுமூகமாக நடத்திட பாளையங்கோட்டை வட்டத்திற்கு துணை ஆட்சியர் நிலையில் 02 பறக்கும் படை அலுவலர்களும், தேர்வுக்குரிய பணிகளை மேற்கொள்ள வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையில் 07 இயக்கக்குழு அலுவலர்களும், 27 ஆய்வு அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, கண்காணித்து வருகின்றனர்.

மேற்படி தேர்வு நாளன்று தேர்வர்கள் தேர்வு எழுத வசதியாக தேர்வு மையத்திற்கு வருவதற்கும், தேர்வு முடிந்த பின் செல்வதற்கும் போதிய பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள 27 தேர்வு மையங்களில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு ஐ (தொகுதி ஐ) பதவிகளுக்கான முதல் நிலை தேர்வில் 7, 598 தேர்வர்களில் 5075 தேர்வர்கள் தேர்வு எழுதினர். 2, 524 தேர்வர்கள் வருகை புரியவில்லை. மேலும் அனைத்து மையங்களிலும் தேர்வின் நடவடிக்கைகளை வீடியோ மூலம் பதிவு செய்யவும், தேர்வு நடைபெறும் கல்வி நிலையத்திற்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு வழங்கவும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாம்



தென்காசி, ஜூலை 15

தமிழ்நாடு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் முகாமினை துவக்கி வைத்ததைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாமில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் திட்ட முகாம் மற்றும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கள ஆய்வில் முதலமைச்சர் என்ற முன்னெடுப்பின் கீழ் மண்டல அளவில் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தி அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டியதை உறுதி செய்வது ஒவ்வொரு துறையின் பொறுப்பாகும் என கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்வு காண வலியுறுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுப்பின் நீட்சியாக அன்றாடம் அரசு துறைகளை அணுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைபடுத்தி அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும், சென்று சேரும் வண்ணம் மற்றுமொரு மைல்கல்லாக மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் முதல்வரின் முகவரி துறையால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மக்களுடன் முதல்வர் என்ற திட்டம் இரண்டாம் கட்டமாக கிராம ஊரக பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 15 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகள் அடையாளம் காணப்பட்டு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தென்காசி மாவட்டத்தின் ஊரக பகுதிகளில் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரே குடையின் கீழ் கோரிக்கைகளை பெற தென்காசி மாவட்ட 10 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 221 கிராம பஞ்சாயத்துக்களை ஒருங்கிணைத்து 51 சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்றைய தினம், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களான களப்பாகுளம், இராமநாதபுரம் , வடக்குப்புதூர், வீரிருப்பு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கான மக்களுடன் முதல்வர் முகாமில் 246 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

இம்முகாமில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துறையின் மூலம் சங்கரன் கோவில் வட்டார பகுதியிலுள்ள 8 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.50 இலட்சத்திற்கான காசோலையினை சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் வழங்கினார்கள்.

இம்முகாமில், மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலர் து.பெ.சுரேஷ்குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) , சதன் திருமலைக்குமார் (வாசுதேவநல்லூர்), சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் லாலாசங்கரபாண்டியன், துணைத்தலைவர் திருமதி. செல்வி, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மதி இந்திரா பிரியதர்ஷினி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மாரிமுத்து, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா, சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கந்தசாமி, அலிஸ்தாயம்மாள், சங்கரன்கோவில் வட்டாட்சியர் பரமசிவன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# செங்கல்பட்டு நகராட்சியில் சேப்பாட்டி அம்மன் கோயில் தேர் திருவிழா கோலாகலம்



செங்கல்பட்டு, ஜூலை 15

செங்கல்பட்டு நகராட்சி நத்தம் பகுதியில் இன்று காலை சேப்பாட்டி அம்மன் கோயிலில் தேர் திருவிழா விமரிசையாக நடந்தது. ஏராளமானபக்தர்கள், தேரை வடம்பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்தனர். செங்கல்பட்டு நகராட்சி நத்தம் பகுதியில் வீற்றிருக்கும் சேப்பாட்டி அம்மன் கோயில், சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு காவல் தெய்வமாக விளங்கி வருகிறது. இந்த கோயிலில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர் திருவிழா நடைபெறுவது வழக்கம். கடந்த 2021ம் ஆண்டு கொரோனா தொற்று காரணமாக திருவிழா நடைபெறாமல், கோயில் வளாகத்திலேயே நடந்தது. இந்நிலையில், 2018ம் ஆண்டுக்கு பிறகு, இந்தாண்டு இன்று காலை தேர் திருவிழா மிக விமரிசையாக நடைபெற்றது. தேரில் மலர் மற்றும் ஆபரண அலங்காரத்துடன் சேப்பாட்டி அம்மன் அமர்ந்து வீதியுலாவாக வந்து, பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஏராளமான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து செங்கல்பட்டு நகரில் தேர் வீதியுலா வந்தது. இன்றிரவு செங்கல்பட்டு நகராட்சி அலுவலகம் எதிரே நிறுத்தப்பட்டு, நாளை காலை மீண்டும் வீதியுலாவாக வரும். நாளை இரவு தான் தேர், கோயில் வளாகத்தில் நிலைநிறுத்தப்படும். விழாவில் வரலட்சுமி மதுசூதனன் எம்எல்ஏ, நகர மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன், கவுன்சிலர்கள், மாவட்ட அறநிலையத்துறை அதிகாரி சரஸ்வதி உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். அங்கு போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

15.7.2024

## மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்கில் லாஸ்லியா



தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனத்தின் அடுத்த தயாரிப்பு திரைப்படம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ள இந்த படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரை இயக்குனர் அட்லி வெளியிட்டுள்ளார். இந்த படத்தின் நாயகனாக ஹரி பாஸ்கர் நடிக்க, நாயகியாக லாஸ்லியா நடிக்கிறார்.

லாஸ்லியா ஏற்கனவே 'ப்ரெண்ட்ஷிப்' 'கூகுள் குட்டப்பா' உள்ளிட்ட படங்களில் நடித்த நிலையில் தற்போது 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' படத்தில் நடிக்கவுள்ளார். அருண் ரவிச்சந்திரன் இயக்கத்தில், ஓஷோ வெங்கட் இசையில், குலோத்துங்க வர்மன் ஒளிப்பதிவில், ராமசுப்பு படத்தொகுப்பில் இந்த படம் உருவாகி வருகிறது.

## மம்மூட்டி படத்தை தொடங்கினார் கவுதம் மேனன்



கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் மம்மூட்டி நடிக்கும் புதிய மலையாளப் படத்தின் படப்பிடிப்பு கொச்சியில் தொடங்கியுள்ளது. கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் அண்மையில் வெளியான படம் 'ஜோஷ்வா'. இந்தப் படத்தைத் தொடர்ந்து அவர் மலையாளப் படம் ஒன்றை இயக்குகிறார். இதன் மூலம் மலையாளத்தில் இயக்குனராகவும் அவர் அறிமுகமாகிறார். இப்படத்தில் மம்மூட்டி முதன்மை கதாபாத்திரத்தில் நடிப்பதுடன் படத்தை தயாரிக்கவும் செய்கிறார்.

இதில் நாயகியாக நயன்தாரா நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. கோகுல் சுரேஷ், லீனா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். படத்தின் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை. படத்தின் தலைப்பையும் படக்குழு வெளியிடவில்லை. இந்நிலையில் இப்படத்தின் படப்பிடிப்பு கொச்சியில் பூஜையுடன் தொடங்கியது. இது தொடர்பான புகைப்படங்களையும் படக்குழு வெளியிட்டுள்ளது.

## அக்ஷய் குமாருக்கு மீண்டும் கொரோனா



பாலிவுட் முன்னணி நடிகர்களில் ஒருவரான அக்ஷய் குமாருக்கு நேற்று முன்தினம் கொரோனா பாதிப்பு உறுதியானது. இதனால் அவர் ஆனந்த் அம்பானி, ராதிகா மெர்ச்சன்ட் திருமணத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது. தமிழில் சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா, அபர்ணா பாலமுரளி, மோகன் பாபு நடிப்பில், கடந்த 2020ல் நேரடியாக ஓடிடியில் வெளியாகி ஹிட்டான படம், 'சூரரைப்போற்று'. இப்படத்துக்கு நிறைய தேசிய விருதுகள் கிடைத்தது.

தற்போது அப்படம் இந்தியில் 'சர்ஃபிரா' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு திரைக்கு வந்துள்ளது. இந்தியிலும் சுதா கொங்கரா இயக்க, ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைத்துள்ளார். அக்ஷய் குமார், ராதிகா மதன், சரத்குமார், சிறப்புத்தோற்றத்தில் சூர்யா நடித்துள்ள இப்படத்தின் புரமோஷன் பணிகளில் அக்ஷய் குமார் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில், திடீரென்று அவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. மேலும், புரமோஷன் குழுவில் இருந்த ஒருவருக்கு கொரோனா பாதிப்பு இருந்தது தெரியவந்தது. இதையடுத்து அக்ஷய் குமார் பரிசோதனை செய்து பார்த்ததில், அவருக்கும் கொரோனா பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், உடனே அவர் மும்பையிலுள்ள வீட்டில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். அதனால்தான் 'சர்ஃபிரா' படம் திரைக்கு வந்த அன்று அவரால் ரசிகர்களை நேரில் சந்திக்க முடியவில்லை. மேலும், முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி, ராதிகா மெர்ச்சன்ட் திருமணத்தில் அவரால் பங்கேற்க முடியவில்லை. முன்னதாக அக்ஷய் குமார், கடந்த 2022ம் ஆண்டிலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று உடல்நிலை தேறியது குறிப்பிடத்தக்கது.

## மைக்கேல் ஜாக்சனை சந்திக்க மறுத்தது ஏன்? ஏ.ஆர்.ரஹ்மான் பிளாஷ்பேக்



மலேசியாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஏ.ஆர்.ரஹ்மான் பேசிய வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது. அதில் பேசும் ஏ.ஆர். ரஹ்மான், '2009ம் ஆண்டு தொடக்கத்தில் நான் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில், என்னுடைய ஏஜென்ட்டுடன் இருந்தேன். அவர் தன்னுடைய நண்பர் என ஒருவரை அறிமுகப்படுத்தி, 'இவர் தான் மைக்கேல் ஜாக்சனுக்கு மேனேஜராக உள்ளார்' என்றார். உடனே நான் அவரிடம், 'நான் மைக்கேல் ஜாக்சனை சந்திக்க முடியுமா?' என கேட்டேன். அதற்கு அவர், "கண்டிப்பாக பார்க்கலாம்.

நான் இப்போதே மெயில் அனுப்புகிறேன்' என்றார். ஒரு வாரம் கடந்தும் எந்த பதிலும் இல்லை. நானும் சரி என அமைதியாக இருந்தேன்.

பின்னர் ஆஸ்கர் விருது விழாவின் நாமினேஷன் பட்டியல் வெளியானது. அதில் என் பெயரும் இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர், 'மைக்கேல் ஜாக்சன் உங்களைப் பார்க்க வேண்டும்' என மெயில் வந்தது. ஆனால், 'நான் இப்போது அவரை பார்க்க விரும்பவில்லை. நான் ஆஸ்கர் விருது வென்றால் அவரைப் பார்க்கிறேன். இல்லையென்றால் நான் சந்திக்கவில்லை' என்று சொல்லிவிட்டேன்.

எனக்கு அப்போது நான் கண்டிப்பாக ஆஸ்கர் விருது வெல்வேன் என்ற நம்பிக்கை இருந்தது. சொன்னபடியே நான் ஆஸ்கர் வென்றேன். அடுத்த நாள் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள மைக்கேல் ஜாக்சன் வீட்டுக்குச் சென்றேன்.

அவர் வீட்டில் தான் இருந்தார். அப்போது சூரியன் அஸ்தமனம் ஆகியிருந்தது. 6.30 மணி இருக்கும். அப்போது அவரது வீட்டின் கதவை யாரோ திறந்தார்கள். நான் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தேன். 2 ஆஸ்கர் விருதுகளை வென்ற சந்தோஷத்தில் உலகத்தின் மேலே மிதந்து கொண்டிருந்தேன். அந்த மகிழ்ச்சியை மைக்கேல் ஜாக்சனுடன் பகிர்ந்து கொண்டேன்' என்றார்.

## ராக்கி சாவந்துக்கு செக்ஸ் டார்ச்சர் தந்த இயக்குனர்: பாலிவுட்டில் பரபரப்பு



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ராக்கி சாவந்துக்கு இயக்குனர் செக்ஸ் டார்ச்சர் கொடுத்த விவகாரம் பாலிவுட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2 முறை திருமணம் செய்து விவாகரத்து பெற்றவர் ராக்கி சாவந்த். பாலிவுட் நடிகையான இவர், கவர்ச்சியான வேடங்களில் மட்டுமே நடிப்பார்.

இவருக்கு சில மாதங்கள் முன் திடீரென உடல் நலம் பாதித்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போது அவருக்கு கர்ப்பப்பை புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக அழுதபடி ராக்கி சாவந்த் பேட்டியும் தந்தார். தற்போது வீட்டில் இருந்தபடியே சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில் பாலிவுட் இயக்குனர் ஹுமான்சு பர்ஜாத்யா என்பவர், புது படத்தில் நடிக்க ராக்கி சாவந்தை அணுகினார். தனது உடல் நலம் சரியில்லை எனக் கூறி ராக்கி சாவந்த் அந்த வாய்ப்பை ஏற்க மறுத்தார். ஆனால் ஹுமான்சு தொடர்ந்து அவரை பல நாட்களாக வற்புறுத்தி வந்துள்ளார். இதையடுத்து கதை சொல்வதற்கு தனது வீட்டுக்கு வரும்படி ராக்கி சாவந்த் அழைத்தார். கதை சொல்ல வந்த ஹுமான்சு, ராக்கி சாவந்திடம் அத்துமீறி நடந்துகொண்டாராம்.

இது குறித்து ராக்கி சாவந்த் கூறும்போது, 'என்னிடம் ஹுமான்சு கதை சொல்லும்போதே அது எனக்கு பிடிக்கவில்லை. இந்த படம் வேண்டாம் என சொல்ல முற்பட்டேன். அப்போது எனது கால்களை தனது கால்களால் அவர் வருடினார். என்ன செய்கிறீர்கள் என நான் கேட்டதும், இது சகஜம்தானே என சொன்னவர், என் கைகளை இருக்கமாக பிடித்தார். மரியாதையாக இங்கிருந்து சென்றுவிடுங்கள் என சொல்லியும் கேட்காமல் சிரித்தபடி அமர்ந்திருந்தார். அப்போது வீட்டில் யாரும் இல்லை. உடனே போன் எடுத்து போலீசுக்கு தகவல் சொல்ல முற்பட்டேன். உடனே அங்கிருந்து அந்த இயக்குனர் ஓடிவிட்டார்' என்றார். இந்த தகவல் பாலிவுட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## யூரோ கோப்பை பைனல் ஸ்பெயின் – இங்கிலாந்து பலப்பரீட்சை




யூரோ கோப்பை கால்பந்து தொடரின் பரபரப்பான பைனலில் ஸ்பெயின் – இங்கிலாந்து அணிகள் இன்று மோதுகின்றன. கடந்த ஜூன் 9ம் தேதி தொடங்கிய இத்தொடரில் மொத்தம் 24 நாடுகள் பங்கேற்றன. நடப்பு சாம்பியன் இத்தாலி நாக் அவுட் சுற்றுடன் வெளியேறியது. பெர்லின் ஒலிம்பிக் அரங்கில் இன்று நள்ளிரவு நடைபெறும் பைனலில் ஸ்பெயின் இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. ஏற்கனவே 3 முறை யூரோ கோப்பையை வென்றுள்ள ஸ்பெயின் 5வது முறையாக பைனலில் விளையாடுகிறது.

2012க்கு பிறகு பைனலில் களமிறங்கும் வாய்ப்பு கிடைத்திருப்பதால், அதில் பட்டம் வென்று சாதிக்க ஸ்பெயின் முனைப்பு காட்டும். மோராடா தலைமையிலான ஸ்பெயின் அணியில் ஒல்மா, வில்லியம்ஸ், ஃபேபியான், ரோட்ரிகோ, மெரினோ, விவியன், கோல் கீப்பர் சைமன் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றன்றனர். 16 வயது இளம் வீரர் லாமின் யாமல் ஆட்டம் உலக அளவில் கால்பந்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவர் இங்கிலாந்துக்கு எதிராக இன்று ஏதாவது அதிசயம் நிகழ்த்த வாய்ப்பு இருக்கிறது.

அதே சமயம் ஹாரி கேன் தலைமையிலான இங்கிலாந்தையும் குறைத்து மதிப்பிட முடியாது. இதுவரை யூரோ கோப்பையை வெல்லாவிட்டாலும், தொடர்ந்து 2வது முறையாக பைனலுக்கு கொண்டு வந்துள்ளார். உலக கோப்பையை வென்றுவிட்ட இங்கிலாந்துக்கு யூரோ கோப்பை இன்னும் கனவாகவே இருக்கிறது. அதிலும் ஐரோப்பியாவின் குட்டி நாடுகள் எல்லாம் கோப்பையை முத்தமிட்ட நிலையில் இங்கிலாந்து அணிக்கு இன்னும் அது எட்டாக் கனியாகவே உள்ளது.

இம்முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் பெல்லிங்காம், ஃபோடன், ரிப்பயர், கீப்பர் பிக்ஃபோர்டு, சாகா, ரைஸ், வெகோர்ஸ்ட் ஆகியோர் கோப்பையை கைப்பற்றியே தீருவது என்ற உறுதியுடன் இருக்கின்றனர். அதிலும் 19 வயதான கோப்பி மைனோ நடுகளத்தில் கலக்குகிறார். இரு அணிகளும் கோப்பையை வெல்ல வரிந்துகட்டுவதால், ஆட்டத்தில் அனல் பறப்பது உறுதி.

★ ஸ்பெயின் இதுவரை யூரோ கோப்பை போட்டிகளில் இங்கிலாந்தை வென்றதில்லை என்ற வரலாறு உள்ளது. பைனலிலும் இந்த அணிகள் இதுவரை மோதியதில்லை. இதுவரை மோதிய 3 ஆட்டங்களிலும் இங்கிலாந்தே வென்றுள்ளது. 1996க்கு பிறகு இப்போதுதான் யூரோ கோப்பையில் இந்த அணிகள் மோத உள்ளன.

★ இரு அணிகளும் 27 முறை மோதியுள்ளதில் இங்கிலாந்து 1310 என முன்னிலை வகிக்கிறது (4 டிரா).

★ இந்த ஆட்டங்களில் இங்கிலாந்து 45 கோல், ஸ்பெயின் 32 கோல் அடித்துள்ளன.

★ சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு அதிகபட்சமாக 252 கோடி ரூபாய் வரை கிடைக்கும்.

## விம்பிள்டன் டென்னிஸ்; 10வது முறையாக இறுதி போட்டிக்கு ஜோகோவிச் தகுதி




கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஆடவர் ஒற்றையரில் நேற்றிரவு நடந்த 2வது அரையிறுதி போட்டியில், 2ம் நிலை வீரரரான செர்பியாவின் 37 வயதான நோவக் ஜோகோவிச், இத்தாலியின் 22 வயதான லோரென்சோ முசெட்டி மோதினர். இதில் ஜோகோவிச் 64, 76, 64 ன்ற செட் கணக்கில் வெற்றிபெற்று பைனலுக்குள் நுழைந்தார். 10 முறையாக அவர் விம்பிள்டன் பைனலுக்கு தகுதி பெற்றுள்ளார். இதற்கு முன் ஆடிய 9 பைனலில் 7ல் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. முன்னதாக நடந்த மற்றொரு அரையிறுதியில், 3ம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், ரஷ்யாவின் டேனியல் மெட்வெடேவ்வை வீழ்த்தினார்.

நடைபெறும் பைனலில் ஜோகோவிச் அல்காரஸ் மோதுகின்றனர். கடந்த ஆண்டும் இவர்கள் இருவரும் தான் பைனலில் மோதிய நிலையில் அல்காரஸ் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. அதற்கு பழிதீர்த்து ஜோகோவிச் 25வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மகளிர் ஒற்றையரில் இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறும் இறுதிபோட்டியில் இத்தாலியின் ஜாஸ்மின், செக்குடியரசின் கிரெஜ்கோவா மோதுகின்றனர். இதில் வெற்றிபெறுபவருக்கு கோப்பையுடன் ரூ. 29.26 கோடியும், ரன்னருக்கு ரூ.15.17 கோடியும் பரிசு கிடைக்கும்.

## டி20 தொடரை கைப்பற்றியது இந்தியா



ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டி20 தொடரை இந்தியா 31 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டி20 போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. ஹராரே நகரில் முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 152 ரன்கள் எடுத்தது. பின்னர் பேட் செய்த இந்திய அணி 15.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 156 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது



**இலனென்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலனாகும் மற்றுப் பெயர்த்து**

**விளக்கம்:**

**யான் வறியவன் என்று நினைத்துத் தீய செயல்களைச் செய்யக்கூடாது, செய்தால் மீண்டும் வறியவன் ஆகி வருந்துவான்.**

## உலக சாம்பியன்ஸ் ஆப் லெஜெண்ட்ஸ்: பாகிஸ்தானை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது இந்தியா



இங்கிலாந்தில் ஓய்வு பெற்ற முன்னாள் வீரர்கள் விளையாடும் உலக சாம்பியன்ஸ் ஆப் லெஜெண்ட்ஸ் 2024 டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. அந்தத் தொடரின் இறுதிப்போட்டியில் யுவராஜ் சிங் தலைமையிலான இந்தியாவும் , யூனிஸ் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணிகளும் மோதின.

இந் த போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பேட்டிங்செய்யமுடிவுசெய்தது. 20ஓவரில் 6விக்கெட்களை இழந்து 156 ரன்களை எடுத்தது. பாகிஸ்தான் சாம்பியன்ஸ் அணியில் அதிகபட்சமாக சோயிப் மாலிக் 41ரன்களையும், கம்ரான் அக்மல் 24 ரன்களையும் எடுத்தனர். இந்தியா சாம்பியன்ஸ் அணியின் அனுரீத் சிங் 43 ரன்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

157 ரன்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய இந்தியா சாம்பியன்ஸ் அணி 19.1 ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 159 ரன்களை எடுத்து சாம்பியன் பட்டம் வென்றது. இந்தியா சாம்பியன்ஸ் அணியில் அதிகபட்சமாக அம்பதி ராயுடு 50 ரன்களையும், குர்கீரத் சிங் மான் 34 ரன்களையும், யூசுப் பதான் 30 ரன்களையும் எடுத்து வெற்றிக்கு உதவினர்.

ஆட்டநாயகனாக அம்பதி ராயுடுவும், தொடர்நாயகனாக யூசுப் பதானும் தேர்தெடுக்கப்பட்டனர்.

## பார்போரா சாம்பியன்

விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசு வீராங்கனை பார்போரா கிரெஜ்சிகோவா முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். பரபரப்பான பைனலில் இத்தாலியின் ஜாஸ்மின் பாலினியுடன் (28 வயது, 7வது ரேங்க்) நேற்று மோதிய பார்போரா (28 வயது, 32வது ரேங்க்) 6-2, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் 1 மணி, 56 நிமிடம் போராடி வென்றார். இது அவர் வென்ற 2வது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும். முன்னதாக, 2021ல் பிரெஞ்ச் ஓபனில் பார்போரா கோப்பையை கைப்பற்றி இருந்தார். ஜாஸ்மின், பார்போரா இருவரும் விம்பிள்டன் ஒற்றையர் பிரிவில் முதல் முறையாக பைனலுக்கு முன்னேறி இருந்தது குறிப்பிடத்தக்கது.



**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
**94436 99066**
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.